**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 99/2024**
**Examination of PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | அந்தோணி ராஜ் ஜெயக்குமார் |
| Father's Name | : | **ஞானமாணிக்கம்** |
| **Village** | : | வேட்டவலம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | **46** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 01.07.2025**

**வாதி தரப்பில் சாட்சியம்:**

நான் வேட்டவலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன். எனது தரப்பு வழக்கினை நிருபணம் செய்வதற்காக நிருபண ஆணை உறுதி ஆவணம் தாக்கல் செய்கிறேன். நிருபண ஆனை உறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து நான் செய்தது தான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 20.08.1942ம் தேதி சவரியம்மாளான என் அம்மா வழி பாட்டி அவர்கள் கிரயம் பெற்ற தாவா சொத்துக்கான விர்கிரய பத்திரம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ1** ஆகும். 13.05.1950ம் தேதியிட்ட சவரியம்மாள் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட விர்கிரய பத்திரம் **வா.சா.ஆ2** ஆகும். 11.02.1969ம் தேதியிட்ட சவரியம்மாள் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட விர்கிரய பத்திரம் **வா.சா.ஆ3** ஆகும்.

(வாதி தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யவதற்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**Sd/- (M.C.Arun)**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்